# அரக்கோணம் நகராட்சி
## சாதாரண நகர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.12 நாள்.27.09.2022

பொருள் : நகர மன்றக் கூட்டம் –அரக்கோணம் நகராட்சி – நாள்: 30.09.2022 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சாதாரண கூட்டம் நடைபெறுதல்– அறிவித்தல் – சம்மந்தமாக.

&&&&&

அரக்கோணம் நகராட்சி நகரமன்றம் சாதாரண கூட்டம் 30.09.2022 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் நகரமன்ற கூடத்தில், நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரண கூட்டத்தில் நகரமன்ற துணை தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(திருமதி.லட்சுமி பாரி)
நகரமன்ற தலைவர்
அரக்கோணம் நகராட்சி

இடம் : அரக்கோணம் நகராட்சி

நாள் :27.09.2022

<u>பொருள் எண் 01</u>

நகராட்சி ஆணையர் (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்டு 2022ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.176** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண் 02</u>

இந்நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டுக்கு பொதுநிதி, குடிநீர்நிதி மற்றும் கல்விநிதியின் கீழ் 02.09.2022 தேதி கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | **<u>கல்விநிதி</u>**<br>வார்டு எண் 36–ல் உள்ள கிருபில்ஸ்பேட்டை ஆரம்ப பள்ளி வளாகத்தில் விடுபட்ட பகுதியில் பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் பணிகள் | 4.00 | K.முனுசாமி | –0.01% | R.சண்முகம் | 0.19% |
| 2 | **<u>குடிநீர் நிதி</u>**<br>தக்கோலம் தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள 14 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயக்கப்படும் மின்மோட்டார்கள் மற்றும் கல்லாறு நீரேற்று நிலையத்தில் உள்ள 11 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளில் இயங்கப்படும் மின்மோட்டார்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்து இயக்குதல் பணி | 5.00 | R.சண்முகம் | –0.28% | K.முனுசாமி | –0.07% |
| 3 | **<u>பொதுநிதி</u>**<br>வார்டு எண்.9–ல் அம்பேத்கர்நகர் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்கு கழிவுநீர் தொட்டி அமைத்தல் | 3.00 | K.முனுசாமி | –0.02% | R.சண்முகம் | 0.12% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | வார்டு எண். 27–ல் உள்ள சோமசுந்தரம் நகர் 1–வது தெருவில் பழுதடைந்துள்ள சாலையினை பராமரிப்பு செய்தல் பணி | 9.60 | K.முனுசாமி | –0.01% | R.சண்முகம் | 0.25% |

**அலுவலக குறிப்பு :** வரிசை எண் 1 .முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.977/2022/இ1)**

**தீர்மானம் எண்.177** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 03</u>

இந்நகராட்சியில் 2022–2023–ம் ஆண்டுக்கு பொதுநிதியின் கீழ் 06.09.2022 தேதி கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | <u>**பொதுநிதி**</u> | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிப் பகுதியில் உள்ள கணேஷ் நகர் 15வது தெரு(பகுதி), TN நகர் 7வதுமெயின் ரோடு, 4வது குறுக்கு தெரு, கணேஷ் நகர் 13வது தெற்கு பகுதி, TNHB அருள்குமரன் துணிக்கடை பின்புறம், ஜெகஜீவன் ராம் சாலை KBN நகர், மோசூர் ரோடு மரகதம் நகர் பிரதான சாலை மற்றும் 1வது மற்றும் 2வது தெரு, ஜோதி நகர் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்கு பின்புறம் தெரு, லட்சுமி நகர் 1வது குறுக்கு சந்து தெரு, கணேஷ் நகர் 1வது தெரு, 4வது தெரு, மேற்கு குறுக்கு 1வது தெரு, 5வது மேற்கு குறுக்கு தெரு, 15வது தெரு பகுதி மற்றும் 4–வது தெரு 4–வது குறுக்கு தெருக்களில் பிரதான மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல் | 9.60 | P.வீரராகவன் | 3.30% | G.தாமோதரன் | 0.00% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பணி | | | | | |
| 2 | அரக்கோணம் நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண். 2 மாதவநகர் விரிவாக்கம் கோல்டன் நகர் 1வது தெரு, மாதவநகர் முதல் ஜானகிராமன் தெரு வரை மற்றும் கல்யாண மண்டபம் தெரு 2வது தெரு, மாதவநகர் DNS தெரு, மாதவநகர் விரிவாக்கம் 2வது தெரு முதல் கோல்டன் நகர் வரை மெயின் ரோடு, மாதவநகர் விரிவாக்கம் கடைசி சிவசக்தி நகர், மாதவநகர் விரிவாக்கம் கடைசி ஜெய்பீம் நகர், அண்ணா தெரு விரிவாக்கம் இஸ்மாயில் நகர் 1முதல் 4வது தெரு வரை, விண்டர்பேட்டை MCC செல்லும் தெரு மற்றும் குறுக்கு தெரு, ஒத்தவாடை தெரு SR கேட் பகுதி, இந்திரா காந்தி சிலை முதல் ஜோதி வள்ளலார் பள்ளி வரை, ராஜிவ்காந்திநகர் முதல் தோல் ஷாப் ரோடு வரை, TN நகர் 7-வது மெயின் ரோடு 1,2,3 வது குறுக்கு தெரு (ம) புத்தர் தெரு , காயிதமில்லத் தெரு, மசூதி தெரு NVN தெரு, அன்னை தெரசா தெருக்களில் பிரதான மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல் பணி | 9.80 | P.வீரராகவன் | 1.92% | G.தாமோதரன் | -0.28% |
| 3 | வார்டு எண். 22-ல் உள்ள SBI அருகில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 | C.பத்மநாபன் | -0.04% | R.சண்முகம் | 1.14% |
| 4 | வார்டு எண். 12-ல் போலீஸ்லைன் தெரு பகுதியில் சிறுபாலம் அமைத்தல் பணி | 2.00 | C.பத்மநாபன் | -0.08% | R.சண்முகம் | 0.47% |

அலுவலக குறிப்பு : வரிசை எண் 1 .முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.977/2022/இ1)**

**தீர்மானம் எண்.178** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 04**

இந்நகராட்சியில் 2022-23 ம் ஆண்டுக்கு பொதுநிதி, மற்றும் குடிநீர் நிதியின் கீழ் 09.09.2022 ஆம் தேதி கீழ்க்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **குடிநீர் நிதி / பொதுநிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1 | அரக்கோணம் நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண். 3 பிள்ளையார் கோவில் தெரு, வார்டு எண். 29 தி.ரு.வி.க தெரு,முத்தப்பன் தெரு வார்டு எண். 12 மணியக்காரர் தெரு. வார்டு எண்.21 தியாகச்சின்னசாமி தெரு, லட்சய்யானர் தெரு. வார்டு எண்.28 சத்தியவாணி முத்து தெரு. வார்டு எண்.6 டவுன்ஹால் 4வது தெரு. வார்டு எண்.10 சிவராஜ் தெரு, அம்பேத்கர் நகர். வார்டு எண்.11 தோல் ஷாப் மெயின் ரோடு. வார்டு எண்.36 சாய் நகர் 3வது சந்து தெரு, செய்யூர் பேட்டை பகுதிகளில் இந்தியா மார்க்-II கைப்பிடி பம்புகளின் பிளாட்பார்ம் பழுது நீக்கம் செய்தல் பணி | 0.75 | R.சண்முகம் | 0.90% | C.பத்மநாபன் | -0.24% |
| 2 | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 19 முதல் 36 வரை குடிநீர் பைப்லைன்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணி | 6.00 | R.சண்முகம் | 0.24% | C.பத்மநாபன் | -0.04% |
| 3 | கிரிசிங்நகர் பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 2.15 | R.சண்முகம் | 0.28% | C.பத்மநாபன் | -0.04% |
| 4 | முருகப்பன் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி | 1.50 | C.பத்மநாபன் | -0.02% | R.சண்முகம் | 0.80% |

**அலுவலக குறிப்பு** : வரிசை எண் 1 .முதல் 4 வரையிலான பணிகளுக்கு மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.977/2022/இ1)**

**தீர்மானம் எண்.179** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 05</u>

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர் பேட்டை பகுதியில் Tied Grant 2022–2023 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நகர்புற காடுகளை உருவாக்கும் பணியினை 14.09.2022 தேதி கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **<u>பொது நிதி</u>** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | Tied Grant 2022–2023 திட்டத்தின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர் பேட்டை பகுதியில் 1798 மரக்கன்றுகளை நட்டு நகர்புற காடுகளை உருவாக்கும் பணி | 5.18 | திரு.S.ரமேஷ்பாபு, | –0.63% | திரு.R.துரைராஜன், | 0.15% |

**அலுவலக குறிப்பு** : மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளியை வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.S.ரமேஷ்பாபு, என்பவருக்கு திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியுள்ளதற்கும் அதற்கான தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.957/2022/இ1)**

**தீர்மானம் எண்.180** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 06</u>

அரக்கோணம் நகராட்சியின் அனைத்து பிரிவுகளிலும் கணினிமயமாக்கப்பட்டு கணினிகளுக்கு தேவைப்படும் Power Supply–க்கு UPS பயன்படுத்தப்பட்டு வந்து இந்நிலையில் 2020ஆம் ஆண்டு பேட்டரிகள் UPS–க்கு பயப்படுத்தப்பட்ட பேட்டரிகள் பழுது ஏற்பட்டு புதிய பேட்டரிகள் மாற்றம் செய்யப்பட்டன. தற்போது உள்ள பழைய பழுது ஏற்பட்டுள்ள கீழ்காணும் பேட்டரிகளை 13.09.2022 அன்று நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பொது ஏலம் விடப்பட்டது. பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்பு தலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விவரம் | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | <u>பொதுநிதி</u> | ஏலதாரர் பெயர் | ஏலம் கோரப்பட்ட தொகை ரூ. | ஏலதாரர் பெயர் | ஏலம் கோரப்பட்ட |
| 1. | 1) 20 எண்ணிக்கை (FEI101N800PLUS 12.57V)<br>2) 2 எண்ணிக்கை (FE00 M100000 –150AH)<br>மொத்தம் 22 எண்ணிக்கை | திரு.J.முகமது அலி | 18,500/- | திரு.முகமது பிலால் | 17,500/- |

**அலுவலக குறிப்பு :** மேற்படி பொதுஏலத்தில் கலந்து கொண்டு ஆரம்ப ஏலத்தொகை ரூ.12,000/- லிருந்து அதிகபட்சமாக ரூ.18,500/- ஏலம் கோரிய ஏலதாரர் திரு.J.முகமது அலி என்பவருக்கு பழைய பேட்டரிகளை ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.977/2021/இ1)**

**தீர்மானம் எண்.181** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 07</u>**

அரக்கோணம் நகராட்சி வார்டு எண்.24 A.B.M சர்ச் 4வது தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடத்தில் உள்ள நச்சுதொட்டிக்கு செல்லும் கழிவு நீர் கால்வாய் பழுதடைந்து மனிதக்கழிவுகள் வெளியேறி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது. மேலும் பொதுகழிப்பிடத்தில் உள்ள மின் மோட்டர் மின் கசிவினால் பழுதடைந்து இயக்காமல் உள்ளது. எனவே மேற்கண்ட பொதுகழிப்பிடத்தில் பழுது ஏற்பட்டுள்ள மின்மோட்டார், ஒயர், ஸ்டார்ட்டர் ஆகிய மின் உபகரணங்களை புதியதாக மாற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர மதீப்பீட்டு தொகை ரூ1.20 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.977/2022/இ1)

**தீர்மானம் எண்.182** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 08</u>**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 ல் கீழ்காணும் சிறுபாலங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைநீர் செல்லாமல் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே பொதுமக்களின் நலன் கருதி கீழ்காணும் சிறுபாலங்கள் புதியதாக அமைப்பதற்கு தோராய செலவினம் ரூ.17.90 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ | தெருவின் பெயர் | தோரய |
|---|---|---|
| 1 | சத்திய மூர்த்தி தெரு கல்வெட்டு அமைத்தல் | 2.20 |
| 2 | சுந்தரம் தெரு 3 இடங்களில் கல்வெட்டு அமைத்தல் | 4.50 |
| 3 | முருகப்பன் தெரு – தர்மராஜா கோயில் தெரு | 2.20 |
| 4 | முருகப்பன் தெரு காந்தி ரோடு சந்திப்பு | 1.70 |
| 5 | சத்திய மூர்த்தி தெரு சந்திப்பு | 2.20 |
| 6 | சுப்புராயன் தெரு சந்திப்பு | 1.70 |
| 7 | சரோஜினி தெரு சந்திப்பு | 2.20 |
| 8 | சுப்புராயன் தெரு | 1.20 |
| | **மொத்தம் ரூ** | **17.90** |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 960 /2022/இ1)

**தீர்மானம் எண்.183** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 09</u>

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022–2023 நிதியாண்டில் அரக்கோணம் நகராட்சிக்கு புதியதாக சந்தை அமைத்தல் பணிக்கு வார்டு எண்.B, பிளாக் எண்.28, T.S.NO. 179 மற்றும் 180க்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள தினசரி நாளங்காடி கட்டித்தினை முழுவதுமாக அப்புறப்படுத்தி அந்த இடத்தில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக நாளங்காடி அமைத்து தருவதற்கு நகரமன்ற தீர்மானத்துடன் விரிவான திட்ட அறிக்கை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 09.09.2022 தேதி காணொளி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் தினசரி நாளங்காடி இடத்தில் ரூ.9.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக நாளங்காடி அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

**தீர்மானம் எண்.184** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 10</u>**

அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண்.11–ல் உள்ள போலாட்சியம்மன் கோயில் வடக்குப் பகுதியில் இருந்த பழைய கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இடிந்து விழும் நிலையில் இருந்த்தால் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது. தற்பொழுது மேற்படி பணிக்கு பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் பள்ளியில் சேர்க்கை எண்ணிக்கை அதிகமாக உள்ளதால், புதியதாக வகுப்பறை கட்டடங்கள் கட்டித் தருமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி பள்ளி வளாகத்தில், காலியாக உள்ள வடக்குப் பகுதியில் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டடம் (வகுப்பு அறைகள் தரைதளம் இரண்டு வகுப்பறைகள் மற்றும் முதல் தளம் இரண்டு வகுப்பறைகள்) கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.40,00,000/– தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் தோரய செலவினத் தொகை ரூ.40,00,000/–திற்கு நகரமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு : –</u>**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகையினை ரூ.40,00,000/–னை இந்நகராட்சி கல்விநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.716 /2022/இ1)**

**தீர்மானம் எண்.185** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 11</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.1173/2022/எம்3 நாள் 10.05.2022ன்படி இந்நகராட்சியில் தற்போது பெறப்பட்டுள்ள மகேந்திரா பொலிரோ வாகனம் எண் TN 73 AW 9741–ற்கு முதல் ஜென்ரல் சர்வீஸ் செய்யவும் மற்றும் ஈப்பு வாகனத்திற்கான தேவையான கூடுதல் உதிரிபாகங்களை பொறுத்தவும் ஜெயின் கார்ஸ் மற்றும் ஆட்டோ சேல்ஸ், பிரைவேட் லிமிடெட், வேலூர் அவர்களிடம் ரூ.39,849/–க்கான கேட்பு தொகை பெறப்பட்டது, எனவே பணியின் அவசர அவசியம் கருதி ஈப்பு வாகனத்தினை உடன் சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளதால் மேற்காணும் செலவினத்தொகை ஜெயின் கார்ஸ் மற்றும் ஆட்டோ சேல்ஸ், பிரைவேட் லிமிடெட், வேலூர் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதற்கு நகரமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பணியின் அவசர அவசியம் கருதி ஈப்பு வாகனத்தினை உடன் சர்வீஸ் செய்து முடிக்க வேண்டியுள்ளதால் மேற்கொள்ளப் –பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

(ந.க.எண்.350/2022/இ1)

**தீர்மானம் எண்.186** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– பின்னேற்பு வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 12**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தினந்தோறும் வார்டுகளில் 36 உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் ஈரக்கழிவுகள், மக்காத திடக்கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் என தரம் பிரித்து அதனை பிளாஸ்டிக் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு BOV, LCV, மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் பசுமை நுண் உரக்குடில்கள் (MCC) மற்றும் தள நுண் உரமையங்களில் (OCC) சேகரிக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

எனவே இந்நகராட்சியில் இயங்கி வரும் 3 நுண் உரக்குடில்களும் (MCC) ஆரம்பிக்கப்பட்டு தற்போது 4 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் இது நாள் வரை நுண் உரக்குடில்களில் உள்ள இயந்திரங்களுக்கு ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை அவ்வப்போது கட்டிடங்களில் மற்றும் இயந்திரங்களில் ஏற்படும் சிறு சிறு பழுதுகள் மட்டுமே சரிசெய்யப்பட்டு வருகிறது. எனவே தற்போது ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மற்றும் கட்டிடங்களில் மற்றும் இயந்திரங்களில் உள்ள பழுதுகளை நிவர்த்தி செய்ய தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

**மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்567/இ1/2022)**

**தீர்மானம் எண்.187 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண் 13**

இயக்குநர், தமிழ்நாடு நகரில் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்471/2022/A2 நாள்.23.08.2022ல் கடிதத்தில் அரசாணை நிலை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.04.2021ல் தெரிவித்துள்ளவாறு முதல் நிலை நகராட்சிகள் தமிழ்நாடு நகரில் பயிற்சி நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் பங்கு தொகையாக ரூ.75,000/-ஐ செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது. அதன்படி 2022-23 ஆம் ஆண்டிற்கான அரக்கோணம் நகராட்சியின் பங்கு தொகை ரூ.75,000/-ஐ பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1479/2017/சி1)**

**தீர்மானம் எண்.188 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 14**

அரக்கோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களால் 2021 – 22 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வார்டு 1 முதல் 12 வரை 12 DBC பணியாளர்களை

வைத்து 01.10.2022 முதல் 31.12.2022 வரை இன்பம் மகளீர் குழு சுவால்பேட்டை மூலம் கீழ்காணும் விவரப்படி வார்டு 1 முதல் 12 வரை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 3.90 லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், , மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்தபடி ஊதியம், சேமநல நிதி பிடித்தம் மற்றும் வருங்கால வைப்பு நிதி உட்பட ஒருவருக்கான செலவி விவரம் பின்வருமாறு'.**

1. தினக்கூலி ரூ.304/– x 3 மாத ஊதியம் = ரூ. 27968
2. சேமநல நிதி (EPF) 13.00% = ரூ. 3636
3. வருங்கால வைப்பு நிதி (ESI) 3.25% = ரூ.909

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.1245/எச்1/2019)

**தீர்மானம் எண்.189** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 15</u>

அரக்கோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் , முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களால் 2021 – 22 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வார்டு 13 முதல் 24 வரை 12 DBC பணியாளர்களை வைத்து 01.10.2022 முதல் 31.12.2022 வரை இளம் தென்றல் மகளீர் குழு கீழ்காணும் விவரப்படி வார்டு 13 முதல் 24 வரை மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 3.90 லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், , மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்தபடி ஊதியம், சேமநல நிதி பிடித்தம் மற்றும் வருங்கால வைப்பு நிதி உட்பட ஒருவருக்கான செலவி விவரம் பின்வருமாறு'.**

1. தினக்கூலி ரூ.304/– x 3 மாத ஊதியம் = ரூ. 27968
2. சேமநல நிதி (EPF) 13.00% = ரூ. 3636
3. வருங்கால வைப்பு நிதி (ESI) 3.25% = ரூ.909

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.1245/எச்1/2019)

**தீர்மானம் எண்.190** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 16</u>

அரக்கோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சல் மற்றும் கொசுக்களின் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் , முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை அவர்களால் 2021 – 22 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வார்டு 25 முதல் 36 வரை 12 DBC பணியாளர்களை வைத்து 01.10.2022 முதல் 31.12.2022 வரை ஏஞ்சல் மகளீர் குழு மூலம் கீழ்காணும்

விவரப்படி வார்டு 25 முதல் 36 வரை மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.3.90 லட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், , மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்தபடி ஊதியம், சேமநல நிதி பிடித்தம் மற்றும் வருங்கால வைப்பு நிதி உட்பட ஒருவருக்கான செலவி விவரம் பின்வருமாறு'.**

1. தினக்கூலி ரூ.304/- x 3 மாத ஊதியம் = ரூ. 27968
2. சேமநல நிதி (EPF) 13.00% = ரூ. 3636
3. வருங்கால வைப்பு நிதி (ESI) 3.25% = ரூ.909

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

(ந.க.எண்.1245/எச்1/2019)

**தீர்மானம் எண்.191 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 17</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் கீழ்காணும் வாகனங்களுக்கு 2022 – 23 ஆம் ஆண்டிற்கான காப்பீடு (INSURANCE) The New India Assurance Co Ltd, Arakkonam. அவர்களின் மூலம் காப்பீடு புதுப்பித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1,20 லட்சத்திற்க்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று பணிகளை மேற்கொண்டமைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No. | VEHICLE NUMBER | VEHICHLE DETAILS |
|---|---|---|
| 1 | TN 23 AR 7435 | FRONT END LOADER (JCB) |
| 2. | TN 23 AS 6307 | TIPPER LORRY |
| 3. | TN 23W 2299 | DUMPER PLACER LORRY |
| 4. | TN 73 W 2316 | TIPPER LORRY |

அலுவலக குறிப்பு : நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கும் மற்றும் 2022-23 ஆண்டிற்கான காப்பீடு (INSURANCE) The New India Assurance Co Ltd, Arakkonam அவர்களின் மூலம் காப்பீடு புதுப்பித்து கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 1.20 லட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 320/எச்1/2019)

**தீர்மானம் எண்.192 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 18</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் TATA ACE மினி லோடு வேன் (LCV) எண். TN73 AY 1701, TN73 AY 1767, TN73R 2340, TN73R 2353, TN73R 2325, TN73R 2355, TN73 AY 1797, TN73 AY 1748, TN73V9270 தழுதிச்சான்று பெற செய்ய வேண்டியுள்ளதால் குப்பை லாரியை பழுது நீக்கம் செய்ய 09.09.2022 அன்று மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்பிடுகிறது.

| வ. எ ண் | விவரம் | ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி (GST 18% உட்பட) | வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை – 42 (GST 18% உட்பட) |
|---|---|---|---|
| 1. | TATA ACE (LCV) எண். TN73AY 1701 | 127800 | 128700 |
| 2. | TATA ACE (LCV) எண். TN73AY 1767 | 109000 | 115600 |
| 3. | TATA ACE (LCV) எண். TN73R 2340 | 107700 | 115100 |
| 4. | TATA ACE (LCV) எண். TN73R 2353 | 117700 | 125900 |
| 5. | TATA ACE (LCV) எண். TN73R 2325 | 101000 | 107100 |
| 6. | TATA ACE (LCV) எண். TN73R 2355 | 109000 | 116000 |
| 7. | TATA ACE (LCV) எண். TN73AY 1797 | 139700 | 147000 |
| 8. | TATA ACE (LCV) எண். TN73AY 1748 | 89600 | 96800 |
| 9. | நாய்கள் பயண வாகனம் TN73V9270 | 85900 | 91500 |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

(ந.க.எண். 045/2022/எச்1)

**தீர்மானம் எண்.193** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 19**

பொது சுகாதாரப்பிரிவில் முதில் கொசு ஒழிப்பு பணிக்கு சிறியரக மற்றும் பெரியரக புகைப்பான் எந்திரம் மூலம் புகை மருந்து தெளித்து முதிர்கொசுக்களை கட்டுப்படுத்த தேவையான பைரித்திரியம் 2% எக்ஸ்ராட்க் குறைந்த அளவே இருப்பு உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்த வருடத்திற்கு தேவையான பைரித்திரியம் 2% எக்ஸ்ராட்க் 300 லிட்டர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Tamil Nadu Multipurpose Indco Serve மூலம் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ. 3.60 லட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1027/எச்1/2022)

**தீர்மானம் எண்.194** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 20**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Outsourcing) 14 தற்காலிக பணியாளர்களை வைத்து பணியில் ஈடுபடுத்த 01.06.2021 முதல் 16.02.2022 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு மேற்காணும் பணி உத்திரவு 16.02.2022

முடிவடைந்துள்ளது. மேலும் 17.02.2022 முதல் 31.08.2022 வரை தொடர் நீட்டிப்பு செய்து பணிஉத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நீட்டிப்பு காலம் 31.08.2022 உடன் முடிவடையவுள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி 01.09.2022 முதல் 30.09.2022 வரை ஒரு மாதத்திற்கு மட்டும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளபட்டதற்கும், 01.10.2022 முதல் 31.11.2022 வரை மேலும் தொடர் நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவின தொகை ரூ.3.50 லட்சம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பணியின் அவசரம் அவசியம் கருதி 01.09.2022 முதல் 30.09.2022 வரை ஒரு மாதத்திற்கு மட்டும் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளபட்டதற்கும், 01.10.2022 முதல் 30.11.2022 வரை மேற்கொள்ள. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 483/2018/எச்1)

**தீர்மானம் எண்.195** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 21**

அரக்கோணம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து வாகனங்களுக்கு 2022-2023-ம் ஆண்டிற்கான சாலைவரி மற்றும் பசுமைவரி அரக்கோணம் மோட்டர் வாகன அலுவலகத்தில் செலுத்த வேண்டியுள்ளதால் கீழ்காணும் வாகனங்களுக்கு 2022-2023ம் ஆண்டிற்கான சாலைவரி மற்றும் பசுமைவரி கேட்பு விவரம் அரக்கோணம் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டர் வாகன அலுவலகத்திலிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்படும் வாகனம் என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கீழ்காணும் தொகைகள் செலுத்தப்பட்டது. எனவே மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினத்தொகை ரூ.**1,05,680**/-அனுமதியும், இத்தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| S NO | VEHICLE NUMBER | VEHICLE DETAILS | YEAR DETAILS | ROAD TAX AMOUNT | GREEN TAX AMOUNT | TOTAL |
|---|---|---|---|---|---|---|
| 1 | TN73W2316 | TIPPER LORRY | 2022-23 | 4,445 | 505 | **4,950** |
| 2 | TN73W2299 | DUMPER PLACER LORRY | 2022-23 | 4,475 | 1010 | **5,485** |
| 3 | TN23AR7435 | FRONT END LOADER (JCB) | 2022-23 | 5,040 | 0 | **5,040** |
| 4 | TN23AS6307 | TIPPER LORRY | 2021-22 to 2022-23 | 11,812 | 1,010 | **12,822** |
| 5 | TN23X 6607 | TIPPER LORRY | 2020-21 to 2022-23 | 46,840 | 1,515 | **48,355** |
| 6 | TN23AS6296 | DUMPER PLACER LORRY | 2020-21 to 2022-23 | 17,630 | 1,010 | **18,640** |
| 7 | TN73V5358 | DUMPER PLACER LORRY | 2020-21 to 2022-23 | 9,378 | 1,010 | **10,388** |
| | | மொத்தம் ரூ | | **99,620** | **6,060** | **1,05,680** |

**அலுவலக குறிப்பு :** நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண் 036/எச்1/2022)

**தீர்மானம் எண்.196** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 22**

இந்நகராட்சியில் UTIS Phase I செயலாக்கம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ள நிலையில், தற்போது UTIS, Phase II செயலாக்கம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர். சென்னை–28. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனர், வேலூர் அவர்களின் அறிவுறுத்தலின்படி செயலாக்கம் செய்து தொடர்ந்து செயல்படவேண்டி உள்ளது. அதன்படி தற்போது UTIS Phas II செயலாக்கம் செய்ய வேண்டி தற்போதைய Configuration –படி கூடுதலாக கணிணி மற்றும் அதன் உபகரணங்கள் புதியதாக கொள்முதல் செய்யவும், உபகரணங்களை DGS&D விகிதப்படி தமிழ்நாடுஅரசு நிறுவனமான ELCOT மூலம் பெற உபகரணங்களை கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ9.50 இலட்சத்திற்கும். மேற்படி பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.197 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 23**

அரக்கோணம் நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டு சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்வதற்கு 18.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில், Sense image Technologies ஒப்பந்ததாரர், சென்னை அவர்கள் அனைத்து இனங்களிலும் தகுதிபெற்று இருந்ததால், அந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு செய்யப்பட்டதில், ஒரு நபருக்கு ரூ. 700/– வீதம் வரி நீங்கலாக பணி செய்து கொடுப்பதாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ( வரிகள் நீங்கலாக) |
|---|---|---|
| 1 | Consultancy Service of condut of survey on Street Vendors, preparation of Bilngual ID Cards Certificates of vending preparation of city Street Vending Plan and Detailed Implementation Plan for Infrastructure Improvement projects etc., under support to Urban Street Vendors (SUSV) Component of NULM in Tamilnadu. | ரூ.700/– ( நபர் ஒன்றுக்கு) |

**அலுவலக குறிப்பு :–**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1620/2016/எப்1)**

**தீர்மானம் எண்.198 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 24**

அரக்கோணம் நகராட்சிக்குபட்ட பகுதிகளில் உள்ள பூங்காக்களை அரசிதழில் வெளியிடுவதற்க்கும் மற்றும் Auto Cad மூலம் கலர் வரைப்படங்கள் வரைந்து அதனை Booklet ஆக தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும் மேலும் இனிவரும் காலங்களில் நகரமைப்பு பிரிவில் மேற்கொள்ள இருக்கும் பணிகளுக்கும் தோராய செலவினம் ரூ.2,50,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1383/2018/எப்1)

**தீர்மானம் எண்.199** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 25**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 2022–23 ம் ஆண்டிற்கான சாலையோர வியாபாரிகளுக்கு காலதாமதமின்றி கடனுதவி கிடைத்திட சாலையோர வியாபாரிகள் மற்றும் வங்கி மேலாளர்களுடன் கூட்டம் நடத்துவதற்கு தேவையான பொருட்களுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| S.No. | Name of the work | Nos | B.Jeevananth am | Devan Brothers Arts Arakkonam | Ilaya Digital Kanchipuram |
|---|---|---|---|---|---|
| 1. | Banner size 4x4 | 1 | 900 | 920 | 950 |
| 2. | Banner size 6x8 | 1 | 2250 | 2300 | 2350 |
| 3. | Banner size 8x8 | 1 | 2500 | 2550 | 2600 |
| 4. | Frame Making with stand 6x8 | 1 | 6200 | 6300 | 6350 |
| 5. | Frame Making 8x8 | 1 | 4200 | 4500 | 4510 |
| 6. | Pasting | 1 | 500 | 550 | 560 |
| 7. | Charminor | 1 | 4000 | 4100 | 4120 |
| 8. | Table | 1 | 200 | 250 | 255 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய B.JEEVANANTHAM ARAKKONAM, என்பவருக்கு பணியின் அவசர அவசியம் கருதி உடன் இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டிள்ளதால் நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1620/2016/எப்1)

**தீர்மானம் எண்.200** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 26**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காகளை அரசிதழில் வெளியிடுவதற்க்கு வண்ண நிற வரைப்படங்கள் வரையப்பட்டு Booklet ஆக தயார் செய்ய உள்ளூர் மற்றும் வெளியூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| S.No | Name of the work | B.Jeevanantham Arakkonam Each One | P.M.R. Planners & Builders Each One | S.D. Planners & Builders Each One |
|---|---|---|---|---|
| 1. | Park and play ground open space, OSR & CPS Drawing | 1600 | 2000 | 1800 |
| 2. | Map correction | 400 | 500 | 450 |
| 3. | A4 sizes Color Print out | 10 | 15 | 11.50 |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய B.JEEVANANTHAM ARAKKONAM, என்பவருக்கு பணியின் அவசர அவசியம் கருதி உடன் இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டிள்ளதால் நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவரின் முன் அனுமதிபெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1383/2018/எப்1)

**தீர்மானம் எண்.201** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 27**

**01–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.ஜி.ராஜன்குமார் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) அண்ணா தெரு விரிவாக்கத்தில் இஸ்மாயில் நகர் தெருக்களுக்கு சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) அ)அவில்தார் முனுசாமி மற்றும் ராஜேந்திர கிரிசிங் தெருவை இணைக்கும் இணைப்புச் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆ) சேர்மேன் பஞ்சாட்சரம் தெரு மற்றும் லால்பகதூர் சாஸ்திரி தெருவை இணைக்கும் இணைப்பு சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இ) வார்டு எண். 1,19,20,21 மற்றும் கைனூர் கிராம பொதுமக்கள் வரை பள்ளி கல்லூரிகள் மற்றும் நகராட்சி அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு செல்ல நாள் ஒன்றுக்கு 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனிக்கும் அண்ணா தெருவிற்கும், கல்யாண மண்டபம் தெருவிற்கும் இடைப்பட்ட இணைப்புச் சாலை ஆகிய மூன்று இணைப்பு சாலைகள் ( 90 மீட்டர்) சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) சாலை அமைத்த நாள் முதல் இன்று வரை மக்கள் பயன்பாட்டிற்கு மிகவும் சிரமமாக உள்ள ரத்தினம் தெரு சாலையினை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
4) சுவால்பேட்டை, பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள கழிவறைகளை சீரமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
5) ரத்தினம் தெருவில் உள்ள மினிபவர் பம்ப் மற்றும் டேங்கிற்கு மேடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
6) அண்ணா தெருவில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பழுது நீக்க கொண்டு சென்ற கைபம்பினை மீண்டும் பொறுத்தி மேடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.202** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 28</u>**

**<u>03–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.கி.சரவணன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) கணேஷ் நகர் 4–வது தெரு சாலையினை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
2) கணேஷ் நகர் 1–வது தெருவில் வேகத்தடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.
3) கணேஷ் நகர் 1–வது தெரு , 2வது கிழக்கு, மேற்கு தெரு மற்றும் விரிவாக்கம், 3–வது மேற்கு விரிவாக்கம், 4–வது மேற்கு விரிவாக்கம், 5–வது மேற்கு விரிவாக்கம், கணேஷ் நகர் 2–வது தெரு, மெயின் தெரு, 1–வது மெயின் குறுக்கு தெரு, கணேஷ் நகர் 3வது தெரு மெயின் தெரு மற்றும் விரிவாக்கம், கணேஷ் நகர் 4–வது தெரு மெயின் தெரு, குறுக்குத் தெரு 1,2,3,4 மற்றும் கணேஷ் நகர் 5–வது தெரு மெயின் தெரு மற்றும் கணேஷ் நகர் 6–வது தெரு மெயின் தெரு, குறுக்குத் தெரு ( மசூதி தெரு) மற்றும் கணேஷ் நகர் 13–வது தெரு குறுக்குத் தெரு, 1–வது மற்றும் 2–வது மற்றும் கணேஷ் நகர் 14–வது தெரு குறுக்குத் தெரு, 1–வது மற்றும் 2–வது விரிவாக்கப்பகுதிகளில் புதியதாக சாலைகள் மற்றும் பழுதடைந்த சாலைகளை சீரமைத்து தருமாறும் மற்றும் மழைநீர் கால்வாய் கட்டிதரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.203** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 29</u>**

**<u>04–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.எஸ். செந்தில்குமார் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 4–வது வார்டிற்கு உட்பட்ட சாஸ்திரி நகர் முதல் தெரு, மசூதி சந்து தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள M/316 முதல் M/328 வரை பல ஆண்டுகளாக குண்டும் குழியுமாக உள்ளதால் நடவடிக்கை மேற்கொண்டு இத்தெருக்களுக்கு சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) அரக்கோணம் நகரம் 6–வது குறுக்குத் தெருவில் வசிக்கும் 1) லட்சுமி க/பெ. லோகநாதன் 2) குல்சன்பீ க/பெ. கலிமுல்லா, 3) ஜெனினா க/பெ. ஜானிபாஷா 4) சாகிதபேகம் க/பெ. கமல் 5) சுதா க/பெ. தினகரன் 6)பதிர்னிஷா க/பெ. கலேஷா 7) புஷ்பலதா க/பெ. முரளி 8) இராணி க/பெ. பாரதி 9) மசூதி 10) லலிதா க/பெ. ஹரிஏழுமலை 11) சங்கரி க/பெ. குமார் 12) சங்கீதா க/பெ. பிரேம் 13) சங்கீதா க/பெ வேலன் மேற்படி நபர்கள் அரக்கோணம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு பி, பிளாக் 41, நகரளவு எண்.111 அரசுக்கு சொந்தமான இடத்தில் 20 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இந்த இடத்திற்கான பட்டா பெற இந்நகராட்சியின் மூலம் தடையில்லா சான்று வழங்க தீர்மானம் நிறைவேற்றி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.204 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 30</u>**

**<u>05–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.A.சாமுண்டீஸ்வரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 5–வது வார்டிற்கு உட்பட்ட நேருஜி நகர் 5–வது தெருவில் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக உள்ள கைபம்பினை அகற்றிவிட்டு வேறு ஒரு இடத்தில் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) நேருஜி நகர் 5வது 2–வது குறுக்குத் தெருவிற்கு சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அப்பகுதியில் பாதாள சாக்கடை சேதமடைந்துள்ளதை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) நேருஜி நகர் 1 வது தெருவிற்கு பிதியதாக பேவர் பிளாக் ரோடு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4) சுடுகாடு பின்புரம் உள்ள பெரிய கால்வாயினை சுத்தம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5) நேருஜி நகர் 5வது முதல் குறுக்குதெருவிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6) நேருஜி நகர் 5வது 2–வது குறுக்கு தெருவின் அருகில் பூங்காவினை சுத்தம் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.205 நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 31**

**08-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பிரியதர்ஷினி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

மோசூர் ரோட்டில் உள்ள (தெரேசா சர்ச் அருகில்) சின்டெக்ஸ் தொட்டியுடன் உள்ள மினி பவர் பம்ப் சேதமடைந்து பல நாட்களாக குடிநீர் வீணாகியுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு சிரமப்படுகின்றனர். எனவே அப்பம்பினை உடனடியாக சீரமைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.206** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 32**

**09-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.P.மாலின் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) அண்ணாதெரு (மோசூர் ரோடு), 2) எம்.சி. ராஜா தெரு, 3) சங்கம் தெரு, 4) பன்னீர் செல்வம் தெரு, 5) அருந்த்தி பாளையம் மற்றும் 6) மரகதம் நகர் ஆகிய அனைத்து தெருக்களும் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.207** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 33**

**12-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ரஷிதா கரிமுல்லா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

12-வது வார்டு பகுதியில் உள்ள மசூதி சந்து தெருவில் உள்ள கைபம்பு பொதுமக்களுக்கு இடையூராக உள்ளதால் அதனை அகற்றி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.208** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 34**

**22-வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.மல்லிகா சீனிவாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) 22-வது வார்டிற்கு உட்பட்ட பண்டிட் ஜவஹர்லால் நேரு தெரு முதல் தெருவில் உள்ள கால்வாயினை உயர்த்தி கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) குல்லன் குட்டை சந்து வழிப்பாதையில் சாலை வசதி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) இந்திரா நகர் பொதுவழிச்சாலையினை சீரமைத்து சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4) சோளிங்கர் ரோடு கல்லறை அருகில் உள்ள டேங்க், தர்மராஜா தெருவில் உள்ள குடிநீர் டேங், குல்லன்குட்டை உள்ள டேங்க் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் இரண்டு குடிநீர் டேங்க் புதியதாக மாற்றி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5) கால்வாயில் கழிவுகள் அதிகமாக வெளியே உள்ளதால் அப்பகுதியில் அதிக துர்நாற்றம் வீசுகிறது. இதனை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.209** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 35</u>**

**<u>23–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.பா. நரசிம்மன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

எம்.ஏ.ஜெயின் நகராட்சி நடுநிலைப்பள்ளி சீரமைத்தும், பள்ளி வளாகத்தினை சுற்றி தரை அமைத்தும், சத்துணவு சமையல் கூடம் அமைத்தும் ஆகியவற்றுடன் புதியதாக பள்ளி கட்டிடம் கட்டிதருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.210** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் 36</u>**

**<u>25–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.துரைசீனிவாசன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

பழனிப்பேட்டை டில்லியப்பன் முதல் தெரு மற்றும் சந்து தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டி.என். நகர் 2–வது தெரு மற்றும் 3–வது தெரு இணையும் வழியில் கல்வெட்டு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போல்நாயுடு தெருவில் பாதாள கால்வாய் உள்ள பகுதியில் இருபுறமும் சுவர் எழுப்பி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.211** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்37</u>**

**<u>28–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.S.ராஜலட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) சோமசுந்தரம் 4–வது தெருவில் புதிய மின்போர் டேங்ன் ஒன்று அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) நீர் ஏற்றும் தொட்டிக்கு அருகில் டேங்க் பகுதியில் ஒரு புதிய மின் விளக்கு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) 28–வது வார்டிற்கு உட்பட்ட பகுதிகளில் முட்புதர்கள் அகற்றிவிட்டு சுத்தம் செய்யப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறன்.

4) சத்தியவாணி முத்து நகர் 2–வது தெருவில் உள்ள சில வீடுகளில் பாதாள சாக்கடை இணைப்பு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5) சத்தியவாணி முத்து நகர் 2–வது தெருவில் பாலம் ஒன்று பழுதடைந்துள்ளதை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6) சத்தியவாணி முத்து நகர் 3–வது தெருவில் இரண்டு புதிய பாலம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7) சத்தியவாணி முத்து நகர் 4–வது தெருவில் பாலம் ஒன்று தேவாலயம் முன்னால் உள்ளதினால் அதனை விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.212** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்38</u>

**<u>29–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.P.நந்தாதேவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) A.N கண்டிகை 2–வது தெருவில் கழிவுநீர் வெளியே செல்ல முடியாமல் தெருக்களில் தேங்கி நிற்கிறது. இதனால் அப்பகுதியில் சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே, அப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைத்து தருமாறும் சாலையின் குறுக்கே வேகத்தடை அமைத்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

2) ஒத்தவாடை 2–வது தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் மரம், செடி, கொடிகள் வளர்ந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளதால், அவ்விடத்தினை சுத்தம் செய்து அப்பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பூங்கா அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.213** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 39</u>

**<u>30–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.S.பிரகாஷ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) பழனிப்பேட்டை காந்திரோடு பகுதியில் 1 மின்சார கம்பம் மற்றும் அங்காளம்மன் கோவில் பின்புறம் உள்ள தெருவில் 2 மின்சார கம்பங்கள் ஆக மொத்தம் மூன்று மின்சார கம்பங்களை அகற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) 30–வது வார்டிற்கு உட்பட்ட அனைத்து தெருக்களிலும் மழைநீர் வடிகால் சீரமைத்தும், புதியதாகவும் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.214** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 40</u>

**<u>31–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.K.லட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

புதுப்பேட்டை 3–வது தெருவில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். எனவே, அப்பகுதிக்கு சாலை வசதி, கால்வாய் வசதி கல்வெட்டு மற்றும் சின்டெக்ஸ் டேங் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.215** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் 41</u>

**<u>32–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.L.ஜெயபால் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

1) 32–வது வார்டிற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கால்வாய்களில் தூர் எடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) 32–வது வார்டு பகுதிகளில் மின்கம்பங்கள் இரும்பு போல்கள் பழுதடைந்துள்ளன. அதனை அகற்றிவிட்டு சிமெண்ட் மின்கம்பங்கள் மாற்றி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.216** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண் 42**

**33–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பரக்கத் சகாப்தின் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) கிருஷ்ணாம்பேட்டை 4–வது தெரு, முபாரக் நகர் 2 மற்றும் 3–வது தெருக்களில் கால்வாய் வசதி அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) கிருஷ்ணாம்பேட்டை3–வது தெரு, 4–வது தெரு மற்றும் 5வது தெரு ஆகிய நான்கு தெருக்களில் உள்ள கைபம்பினை அகற்றிவிட்டு சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) முபாரக் நகர் வீடுகளின் மீது H.D. Line இருப்பதால் அதனை மாற்றியமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.217** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 43**

**34–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.ஆ.ரஸியா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) முத்தப்பன் தெரு கடைசியில் (அருந்ததி பாளையம்) கடைசியில் பாதாள சாக்கடை திட்டம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) காந்தி ரோடில் கால்வாய் அமைத்து அதன் மேல் நடைமேடை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) 34–வது வார்டு பகுதிகளில் உள்ள மின்கம்பங்களில் TUBE LIGHT அகற்றிவிட்டு LED LIGHT அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

4) 34–வது வார்டில் 3 ஆழ்துளை கிணறு அமைத்து அதில் மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.218** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 44**

**35–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.வ.காந்திராஜ்அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்**

1) முனுசாமி பிள்ளை தெருவிற்கு, தரமான சாலை வசதி, மின் மோட்டாருடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க், சோலார் மின் விளக்குகள் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2) முனுசாமி பிள்ளை தெருவில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவு பெறாமல் உள்ளதனை விரைவில் முடித்து தருமாறும், அரசாத்தம்மன் கோயில் குளத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சீரமைத்து தருமாறும் மற்றும் கிருணாம்பேட்டை முதல் தெரு, இரண்டாவது தெருவில் கல்வெட்டுகள் மாற்றி தருமாறும், கிருஷ்ணாம்பேட்டை இரண்டாவது தெருவில் உள்ள பள்ளி வாசல் மற்றும் ஆதிதிராவிடர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சிசிடிவி கேமராக பொருத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) நகராட்சிக்குட்பட்ட குளத்துக்கரை பகுதியில் தரமான சாலை வசதி செய்து தருமாறும், அதே தெருவில் மின் மோட்டாருடன் வடிய இரண்டு சின்டெக்ஸ் டேங்க்

அமைத்து குடிநீர் வசதி செய்து தருமாறும், குளக்கரை தெருவில் சோலார் மின் விளக்கும் மற்றும் குடிநீர் பைப்லைன் அமைத்து தருமாறும் குளக்கரை தெருவில் உள்ள குளத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சீரமைத்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

4) முனுசாமி பிள்ளை தெருவில் நகராட்சி பள்ளி, அங்கன்வாடி மையம் மற்றும் எஸ். ஆர்.கேட் ஆகிய பகுதிகளில் சிசிடிவி கேமரா பொருத்து தருமாறும், அதே பகுதியில் உள் நகராட்சி குடிநீர் தேக்கத் தொட்டி அருகில் பூங்கா அமைத்து தருமாறும் கேட்டுக்கொள்கிறன்.

5) ஓச்சேரி ரோடு பகுதியில் மக்கள் குப்பைகள் கொட்ட குப்பைத் தொட்டிகள் அமைத்து தருமாறும், மேலும் ஓச்சேரி ரோடு புதுப்பேட்டை இரயில் நிலையம் செல்லும் பாதையில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவு பெறாமல் உள்ளதனை முடித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6) நகராட்சியின் முக்கியப்பகுதியான எஸ். ஆர்.கேட் பகுதியில் இ–சேவை மையம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

7) கிருஷ்ணாம்பேட்டை 7–வது தெரு, போர்டிங் தெரு முறையில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ள மின்கம்பத்தினை வேறு இடத்திற்கு மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தீர்மானம் எண்.219** **நாள். 30.09.2022**

**அலுவலக குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்)/–திருமதி.லட்சுமி பாரி,
நகரமன்ற தலைவர்,
அரக்கோணம் நகராட்சி.